**தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், புதுக்கோட்டை**
**முன்னிலை:– திரு.K.S.பால்பாண்டியன், B.A.,B.L.,**
**தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், புதுக்கோட்டை**
**2025–ம் வருடம் ஏப்ரல் திங்கள் 04–ம் நாள் வெள்ளிக்கிழமை**
**M.P.No.03/2025 IN SC.No.138/2018**

காவல் ஆய்வாளர்,
ஆலங்குடி காவல் நிலையம்,
புதுக்கோட்டை மாவட்டம்,
குற்ற எண்.166/2013 ... மனுதாரர் /குற்றமுறையிடுபவர்

/ எதிர் /

1. ரவிக்குமார்
2. சங்கர்கணேஷ் ...எதிர்மனுதாரர்கள் /எதிரிகள்

இவ்வழக்கு கடந்த 28.03.2025–ம் தேதி என் முன் இறுதி விசாரணைக்கு வந்ததில் மனுதாரர்/குற்றமுறையிடுபவர் தரப்பில் சிறப்பு அரசு பொதுவழக்கறிஞர் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/ எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஜெயநாதன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும் மற்றும் ஆவணங்களை பரிசீலித்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்....

**உத்தரவு**

அரசுத்தரப்பில் ஏற்கனவே விசாரிக்கப்பட்ட அ.சா.2 சாட்சியை திரும்ப அழைத்து மறுவிசாரணை மேற்கொள்வதற்கு அனுமதியளித்து உத்தரவிடக்கோரி கு.வி.மு.ச.பிரிவு 311–ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுவில் கண்ட சுருக்கமான விபரம் பின்வருமாறு**

அசல் வழக்கானது அரசுத்தரப்பு சாட்சியத்திற்காக வாய்தா ஏற்பட்டுள்ளது. எதிரிகள் இ.த.ச.பிரிவுகள் 294B, 324, 307–ன் கீழ் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர். அரசு தரப்பில் சாட்சிகள் அனைவரும் முதல் விசாரணை செய்யப்பட்டுள்ளனர். அதன்பிறகு இரண்டு வருடங்கள் கழித்து அந்த சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்வதற்காக திரும்ப அழைக்க மனுசெய்து மனு

அனுமதிக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் 28.01.2025 தேதியில் அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சிகள் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளனர். அந்த சமயம் அ.சா.2 சாட்சியை குறுக்கு விசாரணையில் கேள்வி எழுப்பும்போது "நீங்கள் புகார் கொடுத்து அந்த புகாரில் நீங்கள் தானே கையெழுத்துப்போட்டீர்கள், போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்யும்போது நீங்கள் அதில் கையெழுத்துபோட்டீர்களா, சம்பவ இடத்திலிருந்து ரத்தம் தோய்ந்த மண், ரத்தம்தோயாத மண், எடுத்தார்களா " என்ற கேள்விகளுக்கு சாட்சி ஆமாம் என்று பதிலளித்துள்ளார். மேற்படி கேள்விகளை அ.சா.2 சாட்சியை கு.வி.மு.ச.பிரிவு 161(3)–ன் படியான வாக்குமூலம் பெறும்போது விசாரிக்கப்பட்டிருக்கவில்லை. அதனால் மேற்படி வாக்குமூலத்திற்கு தொடர்பில்லாத சங்கதியை எதிரிகள் தரப்பில் கேள்வியாக கேட்கப்பட்டுள்ளது. அதற்கு மேலும் சாட்சியின் பதிலானது அரசுதரப்பு வழக்கிற்கு விரோதமாக உள்ளது. அ.சா.2 சாட்சியை அரசு தரப்பில் அழைத்து வந்து விசாரணை மேற்கொண்டிருக்கும்போது அவர் பிறழ்சாட்சியாக மாறுவாரேயானால், அது குறித்து மறுவிசாரணை மேற்கொள்ளவேண்டியது அவசியமாகும். அதுபோன்று அ.சா.2 சாட்சியும் அவருடைய குறுக்கு விசாரணையின்போது அரசு தரப்புக்கு எதிராக பதிலளித்துள்ளதால் அது குறித்து மறுவிசாரணை செய்யப்படவேண்டும் என்று நீதிமன்றத்தில் கோரியபோது நீதிமன்றம் அதற்கு மறுத்துவிட்டது. மேலும் அது குறித்து சாட்சியை திரும்ப அழைக்க கோரும் மனுவினை தாக்கல் செய்ய அறிவுறுத்தியது. ஒரு சாட்சியை முதல் விசாரணை செய்யப்பட்ட பிறகு எதிர்தரப்பினர் அந்த சாட்சியை குறுக்கு விசாரணை செய்யவும் அதன்பிறகு சாட்சியை அழைத்து வந்த நபர் விரும்பினால் அவரை மறுவிசாரணை செய்யவும் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 138–ல் வழிவகை செய்யப்பட்டுள்ளது. முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை தொடர்புடைய சங்கதிகளாக இருக்க வேண்டும். மறுவிசாரணையானது குறுக்கு விசாரணையில் கேட்கப்பட்ட சங்கதிகளை விளக்குவதற்காக அமைந்திருக்கவேண்டும் மற்றும்

நீதிமன்றத்தின் அனுமதியுடன் புதிய சங்கதிகள் குறித்து விசாரிக்கப்பட்டால் அந்த சங்கதிகளை பொறுத்து மறுபடியும் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படலாம். அதனால் குறுக்கு விசாரணை சங்கதிகளை மறுவிசாரணை செய்வதற்கு அரசு தரப்புக்கு உரிமை உள்ளது. அதனடிப்படையில் அ.சா.2 சாட்சியை திரும்ப அழைத்து அவருடைய குறுக்கு விசாரணை சங்கதிகள் குறித்து மறுவிசாரணை மேற்கொள்ளப்படவேண்டும். அதற்காக மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. **<u>எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையில் கண்ட சுருக்கமான விபரம் பின்வருமாறு</u>**

அ.சா.2, எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை செய்யப்படும்போது சொல்லியுள்ள வாக்குமூலங்கள் அனைத்தும் உண்மையாகும். ஆனால் இரண்டு ஆண்டுகள் கழித்து அ.சா.2 சாட்சியம் அளிப்பதால் அவ்வாறு கூறியுள்ளதாக சொல்வது தவறாகும். கு.வி.மு.ச பிரிவு 161(3)–ல் சொல்லியுள்ள வாக்குமூலங்களுக்கு விரோதமாக குறுக்கு விசாரணையில் அ.சா.2 சாட்சியம் அளித்துள்ளதால் அவர் பிறழ்சாட்சியம் அளித்துள்ளதாகவும் அந்த சங்கதிகளை பொறுத்து மறுவிசாரணை செய்யவேண்டும் என்று கோருவது சட்டப்படி ஏற்புடையது அல்ல. 161(3) கு.வி.மு.ச. வாக்குமூலத்திற்கு முரணாக அரசுத்தரப்பு சாட்சி முதல் விசாரணையில் முரண்பாடாக சாட்சியம் அளித்தால் மட்டுமே அதை பிறழ்சாட்சியாக பாவிக்க முடியும். அரசுத்தரப்பில் அ.சா.2 சாட்சியை மறுவிசாரணை செய்யக்கோரியதாகவும் அதை நீதிமன்றம் மறுத்துவிட்டதாகவும், கூறுவது உண்மைதான். ஆனால் அ.சா.2 சாட்சியை மறுவிசாரணை செய்வதற்காக திரும்ப அழைப்பதற்கு மனு தாக்கல் செய்ய அரசுத்தரப்பை அறிவுறுத்தியதாக சொல்வது பொய்யாகும். மேற்படி வழக்கில் அ.சா.2 சாட்சியை குறுக்கு விசாரணை செய்த பிறகு அரசுத்தரப்பு வழக்கறிஞர் மேற்படி சாட்சியை மறுவிசாரணை செய்ய முற்பட்டார். குறுக்கு விசாரணையின்போது அ.சா.2–ன் சாட்சியத்தில் எவ்வித பொருள் மயக்கமும் இல்லையென்பதால் அரசுத்தரப்பில்

குறுக்குவிசாரணை சாட்சியம் குறித்து மறுவிசாரணை செய்ய இயலாது என்று நீதிமன்றத்தால் ஆட்சேபிக்கப்பட்டு மறுவிசாரணை வாய்ப்பு மறுக்கப்பட்டது. அதற்கு மாறாக அரசுத்தரப்பில் கூறியுள்ள சங்கதிகள் பொய்யாகும். குறுக்கு விசாரணை என்பது பரந்துவிரிந்து அதன் எல்லை மிகவும் விரிவானதாகும். சாட்சிகளால் மறைக்கப்பட்ட உண்மைகளை வெளிக்கொண்டு வருவதே குறுக்கு விசாரணையின் நோக்கமாகும். அவ்வாறு உண்மையை வெளிக்கொண்டு வருவதன் அடிப்படையில் தான் நீதிமன்றங்கள் உண்மையை அறிய முடியும் என்பது நிலைநிறுத்தப்பட்ட சட்டமாகும். அ.சா.2 சாட்சியை முதல் விசாரணை செய்த பிறகு அவருடைய முதல் விசாரணை சாட்சியம் குறித்து பிறழ்சாட்சியாக அனுமதிக்க கோரவில்லை. அவ்வாறான சமயத்தில் அ.சா.2 சாட்சியால் குறுக்கு விசாரணையில் தெரிவிக்கப்பட்ட உண்மையை பொறுத்து அரசுத்தரப்பில் அந்த சங்கதியை மறுபடியும் மறுவிசாரணை மேற்கொள்ளவேண்டும் என்பது இயற்கை நியதிக்கு புறம்பானதாகும். அ.சா.2 சாட்சியும் அவருடைய குறுக்குவிசாரணையின்போது தெளிவாக பொருள் விளங்கிக்கொள்ளும் நிலையில் இருந்து வந்ததால் அது குறித்து மறுவிசாரணை தேவையில்லை. இந்நீதிமன்றம் அரசுத்தரப்புக்கான மறுவிசாரணையை மறுத்தளித்த நிலையில் அதன்பேரில் சீராய்வு மனுதாக்கல் செய்யாமல் மறுபடியும் சாட்சியை திரும்ப வரவழைப்பதற்காக தாக்கல் செய்துள்ள இந்த மனு சட்டப்படி ஏற்புடையதல்ல. அதனால் மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும்.

4. இந்நிலையில் மனு அனுமதிக்கப்படவேண்டுமா? என்பதே இங்கு தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனையாக இருந்து காணப்படுகிறது.

5. **<u>தீர்வு:</u>**

அசல் வழக்கில் எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 294(B), 324 மற்றும் 304 ன் படி வழக்கு தாக்கல் செய்யப்பட்டு அதில் சாட்சிகளாகவும் முதல் விசாரணை

செய்யப்பட்டிருந்தனர். இந்நிலையில் அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சிகளை திரும்ப அழைத்து குறுக்கு விசாரணை செய்யவேண்டும் என்று மனு செய்திருந்ததன்பேரில் அந்த மனு அனுமதிக்கப்பட்டு அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சிகள் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளனர். 2வது எதிரி தம்முடைய குறுக்கு விசாரணையின்போது வழக்கு சம்மந்தமாக அ.சா.2 சாட்சிதான் புகார்கொடுத்ததாகவும், அவர் புகார் சங்கதிகளை சொல்ல சொல்ல வாக்குமூலமாக எழுதி அ.சா.2–யிடம் கையெழுத்து வாங்கி அதைபோல் போலிசார் மாதிரி வரைபடம் தயார் செய்து அந்த சமயத்தில் அ.சா.2 சாட்சியிடம் கையெழுத்து வாங்காமல் அதன்பிறகு தான் போலிசார் கையெழுத்து வாங்கியதாகவும் சாட்சியம் அளித்துள்ள சங்கதி குறித்து அவர் தம்முடைய கு.வி.மு.ச பிரிவு 161(3)–ன்படி வாக்குமூலம் அளிக்கும்போது கூறியிருக்காத சங்கதியை எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணையின்போது அவ்வாறான கேள்விகளுக்கு பதிலளித்துள்ளதால் அந்த பதில் அரசுத்தரப்புக்கு விரோதமாக இருப்பதால் அந்த சங்கதி குறித்து அ.சா.2 சாட்சியை அரசுத்தரப்பில் மறுவிசாரணை செய்யவேண்டும் என்று அரசுத்தரப்பில் கோரப்பட்டது.

6. எதிரிகள் தரப்பில் வாதுரைத்ததுபோல் ஒருசாட்சியை வழக்கு பொருண்மை குறித்து குறுக்கு விசாரணை மேற்கொள்ளும்போது அது பரந்து விரிந்த சாட்சியமாகவே இருப்பதற்கு வாய்ப்புள்ளது. குறுக்கு விசாரணையில் சாட்சியின் முதல் விசாரணை குறித்த கேள்விகளுக்கான பதிலை மட்டுமோ, அல்லது அந்த சாட்சியால் கு.வி,.மு.ச பிரிவு 161(3) இன் படியான வாக்குமூலத்தில் தெரிவித்திருந்த சங்கதிகளுக்கான பதிலை மட்டுமோ, கேள்வியாக எழுப்ப வேண்டுமென்ற அவசியம் இல்லை. மாறாக வழக்கு பொருண்மை குறித்து சாட்சிகள் எந்த வகையிலும் கேள்வி எழுப்புவதற்கு எதிரித்தரப்பிற்கு உரிமை உண்டு. அதனால் ஒரு குறிப்பிட்ட வரையறையில் மட்டுமே சாட்சியிடமிருந்து குறுக்கு விசாரணை செய்து பதில் தரமுடியும் என்ற கட்டாயம் எதுவும் இல்லை. கையில் உள்ள இந்த வழக்கிலும் அ.சா.2 சாட்சியை குறுக்கு விசாரணை

செய்யும்போது அவருடைய சாட்சியத்தின் நம்பகத்தன்மையையும் வழக்கு சங்கதி சம்மந்தமாக அவருக்கு தெரியவந்த விபரங்களை மட்டுமே கேள்வியாக எழுப்பப்பட்டுள்ளது. அந்த வகையில்தான் அ.சா.2 சாட்சியிடம் வழக்கு சம்மந்தமாக புகார் அளித்தது யார் என்பது போன்றும் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்த சமயத்தில் அ.சா.2 சாட்சியிடம் கையெழுத்து எதுவும் பெற்றார்களா என்பதுபோன்றும் அ.சா.2 சாட்சி புகார் வாக்குமூலத்தை எவ்வாறு வழங்கினார் என்பது குறித்தும் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. அந்த விதமான கேள்விகளை அ.சா.2 சாட்சி அவருடைய கு.வி.மு.ச. பிரிவு 161(3)–ன்படியான வாக்குமூலத்தில் கூறியிருக்கவில்லை என்பதற்காக குறுக்கு விசாரணையின்போது எதிரிகள் தரப்பில் கேட்கப்பட்டுள்ள மேற்படி கேள்விகள் அரசுத்தரப்பு வழக்கிற்கு தொடர்பில்லாத கேள்விகள் என்று கருத இயலாது. அதற்கு மேலும் குறுக்கு விசாரணையின்போது புதிதான ஒரு கேள்விக்கு சாட்சி பதில் அளித்துள்ளார் என்ற சங்கதி அரசுத்தரப்புக்கு விரோதமாக உள்ளது என்ற காரணத்திற்காக மட்டும் அந்த கேள்வி குறித்து அரசுத்தரப்பில் மறுவிசாரணை மேற்கொள்ள இயலாது. அவ்வாறு அதுபோன்ற கேள்விகளை மறுவிசாரணையில் விளக்கி அதற்கு பதில் பெறும்போது குழப்பமான சாட்சியத்தை வெளிப்படுத்தக்கூடியதாக இருக்கும்.

7. இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 138–ன்படி ஒரு சாட்சியை அழைத்து வந்த நபர் அவர் தரப்பு வழக்கு குறித்து முதல் விசாரணை சாட்சியம் பெறலாம். அந்த முதல் விசாரணை சாட்சியத்தில் அவர் அழைத்து வந்த நபரின் கட்சிக்கு விரோதமாக சாட்சியம் அளிப்பாரேயானால் அதே சாட்சியை அவர் தெரிவித்த சாட்சியம் குறித்து அவரை அழைத்து வந்த நபர் குறுக்கு விசாரணைக்கு உட்படுத்த சட்டப்படி கடமைப்பட்டவர் ஆவார். அவ்வாறு அழைத்து வந்த நபரே குறுக்கு விசாரணை மேற்கொள்ளும்போது குறுக்குவிசாரணையில் வெளிப்படுத்திய சங்கதிகள் குறித்து எதிர்த்தரப்பிலும அந்த சாட்சியை குறுக்கு

விசாரணை செய்ய உரிமை உள்ளது. ஆனால் முதல் விசாரணை சாட்சியம் போதுமான அளவில் பெறப்பட்டு விட்டு அந்த நபரை அழைத்து வந்த நபர் பிறழ்சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்யாமல் இருந்துவிட்டு பிற்பாடு எதிர்தரப்பினர் அந்த சாட்சியை குறுக்கு விசாரணை செய்யும்போது கேட்கப்பட்ட கேள்விகள் அழைத்து வந்த நபருக்கு பாதமாக உள்ளது என்பதற்காக அவ்வாறான கேள்விகள் குறித்து நீதிமுறையில் தவறிழைக்கப்பட்டுள்ளது என்ற சமயம் தவிர மற்ற சமயங்களில் அழைத்து வந்த நபரால் குறுக்கு விசாரணை சாட்சியத்திற்கு உட்படுத்த இயலாது.

8. அதேபோல் மறுவிசாரணை சாட்சியம் என்பதும் குறுக்கு விசாரணையின்போது கேட்கப்பட்ட கேள்விகளில் பொருள்மயக்கம் ஏதேனும் இருந்து அந்த பொருள் மயக்கத்தை விளக்கி கூறவேண்டிய அவசியம் ஏற்பட்டால் மட்டுமே மறுவிசாரணையின்போது அது குறித்து கேள்வி எழுப்ப முடியும். மாறாக குறுக்கு விசாரணையின்போது அழைத்து வந்த நபருக்கு விரோதமாக உள்ளது என்ற காரணத்திற்காக மட்டும் அழைத்து வந்த நபரால் குறுக்கு விசாரணை செய்ய இயலாது. கையில் உள்ள இந்த வழக்கிலும் குறுக்கு விசாரணையின்போது அ.சா.2 சாட்சியால் வெளிப்படுத்தப்பட்ட பதில்கள் நீதிமுறையில் தவறிழைத்து பெற்றபதில்களாக தெரியவில்லை. அரசுத்தரப்பில் நமது மாண்பமை உச்ச நீதிமன்றத்தின், Varshagarg vs The state of Madhyapradesh and others, 2022 livelaw (sc) 662 என்ற முன் தீர்ப்பு வழக்கை தாக்கல் செய்து அரசுத்தரப்பில் விடுபட்ட சங்கதிகளை நிரப்புவதற்காக கு.வி.மு.ச.பிரிவு 311ன் கீழ் மனு தாக்கல் செய்திருப்பதாக கூறுவது ஏற்புடையதல்ல என்றும் நீதிமன்றங்கள் தன் விருப்புரிமை அதிகாரத்தின் கீழ் சாட்சிகளை எந்த சமயத்திலும் திரும்ப அழைத்து குறுக்கு விசாரணையோ, அல்லது மறுவிசாரணையோ மேற்கொள்ளலாம் என்றும் எடுத்துரைத்துள்ள கருத்துரைகளை சமர்ப்பித்து

வாதுரைத்தபோதிலும் நமது மாண்பமை உச்ச நீதிமன்றத்தின், Mohanlal shamji soni என்ற முன்தீர்ப்பு வழக்கில்,

"The aid of the section should be invoked only with the object of discovering relevant facts or obtaining proper proof of such facts for a just decision of the case and it must be used judicially and not capriciously or arbitrarily because any improper or capricious exercise of the power may lead to undesirable results. Further it is incumbent that due care should be taken by the court while exercising the power under this section and it should not be used for filling up the lacuna left by the prosecution or by the defence or to the disadvantage of the accused or to cause serious prejudice to the defence of the accused or to give an unfair advantage to the rival side and further the additional evidence should not be received as a disguise for a retrial or to change the nature of the case against either of the parties".

என்று எடுத்துரைத்துள்ளதை கவனமாக பரிசீலிக்கும்போது இரு தரப்பிலும் சாட்சிகளை திரும்ப அழைத்து குறுக்கு விசாரணை மேற்கொள்ளும்போது அது இரு தரப்புக்கும் நீதிமுறையில் பாதகம் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதில் நீதிமன்றங்கள் கவனமாக செயல்பட வேண்டும் என்பதாக அறிய முடிகிறது. கையில உள்ள இந்த வழக்கிலும் அ.சா.2 சாட்சியின் குறுக்கு விசாரணை சாட்சியமானது அரசுத்தரப்பு வழக்கு பொருண்மைகளை பொறுத்த அளவில் அரசுத்தரப்புக்கு நீதிமுறையில் பாதகம் ஏற்படவில்லை என்ற காரணத்தினாலும் அரசுத்தரப்பில் இந்த மனுவை தாக்கல் செய்யும்பொழுது வேறு பொருண்மைகள் குறித்து அரசுத்தரப்பு வழக்கிற்கு பாதகம் ஏற்படுவதாக அ.சா.2–ன் சாட்சியம் அமைந்துள்ளது என்று குறிப்பாக எடுத்துரைத்திருக்காத காரணத்தினாலும் அ.சா.2 சாட்சியை அரசுத்தரப்பில் திரும்ப அழைத்து மறுவிசாரணை செய்யவேண்டிய அவசியமில்லை என்று மனு பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

ஆகவே இதன் முடிவில் மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. மனுவின் தன்மை கருதி செலவு தொகை எதுவும் விதிக்கப்படவில்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2025–ம் வருடம் ஏப்ரல் மாதம் 04–ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒ/ம்–K.S.பால்பாண்டியன்
தலைமை குற்றவியல் நீதிபதி,
புதுக்கோட்டை.

**இருதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** ... இல்லை.

ஒ/ம்–K.S.பால்பாண்டியன்
தலைமை குற்றவியல் நீதிபதி,
புதுக்கோட்டை.

/ உண்மை நகல் /